IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.
RANIPET DISTRICT.

DEPOSITION OF WITNESS
**SC.No. 23/2026 - PW-2**

| | |
|---|---|
| Name | வெங்கடேசன் |
| Husband/Father Name | கிருஷ்ணமூர்த்தி |
| Village /Area | வேலூர் |
| Taluk | வேலூர் |
| Occupation | தலைமை காவலர் |
| Age | 35 |
| Religion | இந்து |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 10.06.2026.

**1 முதல் 4 எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை :**

நான் தற்போது தலைமைக் காவலராக நெமிலி காவல் நிலையத்தில் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 12.1.2025 ந்தேதி 13.00 மணிக்கு புகையிலை குட்கா சம்மந்தமாக தடுப்பு நடவடிக்கைக்காக ரோந்தில் ஈடுபட்டிருந்த போது உதவி ஆய்வாளர் அவர்களுக்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் அரக்கோணம் ரயில்வே ஒர்க் ஷாப் பின்புறம் உள்ள முள்புதரில் உள்ள பகல் 13.30 மணிக்கு சிலர் அங்கிருப்பதாக தகவல் வந்தது. அங்கு சென்று பார்த்த போது எங்களை கண்டதும் நான்கு நபர்கள் தப்பிக்க முயன்றனர். அதில் ஒருவரை மட்டும் பிடித்து விசாரிக்க அவர் பெயர் சசிகுமார் (எ) கௌதம் என்று சொன்னார். அவர்கள் அருகில் கவரில் கஞ்சா இருந்தது. அதற்கு அருகில் 2 அடி நீளமுள்ள வீச்சறுவாள் ஒன்று இருந்தது. அவரிடம் விசாரிக்க தப்பி ஓடிய நபர்கள் குமரன், மதன்குமார்,மார்ட்டின் என தெரிய வந்தது. அவரிடம் விசாரித்த போது நான் மிக பெரிய ரவுடி என்றும் அவ்வழியாக செல்லும் பொது மக்களிடம் செலவுக்காக மிரட்டி பணம் பறிப்பதற்காக இருந்ததாகவும் அவர்கள் மீறும் பட்சத்தில் அவர்களை மிரட்டுவதற்காக கத்தியை வைத்திருந்ததாகவும் அருகில் இருந்த கவரை எடுத்து பார்த்த போது அதில் கஞ்சா போன்று இருந்தது. உதவி ஆய்வாளர் வைத்திருந்த மின்தராசில் எடை போட்டு பார்க்க சுமார் 200 கிராம் கஞ்சா எனும் போதை பொருள் இருந்தது. அவரை சோதனை செய்ய உடன் அரசு

அதிகாரிகள் இல்லாமல் தாங்களே சோதனை செய்யலாம் என்று ஒப்புக் கொண்டதால் நாங்களே சோதனை செய்தோம். எதிரி கௌதம் 14.00 முதல் 15.00 மணிவரை அவராக ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததை பதிவு செய்து எதிரி வைத்திருந்த கத்தியையும் கஞ்சாவையும் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றி நானும் என்னுடன் இருந்த காவலரும் கையொப்பமிட்டோம். மேலும் உதவி ஆய்வாளருடன் சென்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தோம். நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் 1ம் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையது தான். அது **அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையது தான். அது **அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் பரிசோதனை கடிததத்தில் உள்ள 1வது கையழுத்து என்னுடையது தான். அது **அ.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் வழக்கு சொத்துக்களான 2 அடி நீளமுள்ள பட்டா கத்தி மற்றும் கஞ்சா பொட்டலம் ஆகியவை முறையே **சா.பொ.1 மற்றும் சா.பொ.2** ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>1</u>** <u>முதல்</u> **<u>4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

நான் சம்பவம் நடந்த போது முதல் நிலை காவலராக பணியிலிருந்தேன். நான் ரோந்து பணியில் இருந்தேன். இப்போது தலைமை காவலராக நெமிலி காவல் நிலையத்தில் பணிபுரிகிறேன். நான் அரக்கோணத்திலிருந்து பணிமாறுதலாகி செல்லும் போது முதல் நிலைக் காவலராக பணியிலிருந்தேன். நான் நகர காவல் நிலையத்தில் எழுத்தராக தான் பணிபுரிந்தேன். எந்த வேலையாக இருந்தாலும் காவல் நிலையத்தில் உள்ள அனைத்து போலீசார் சென்றாலும் காவல் நிலையத்தில் எழுத்தர் மட்டும் இருப்பார் என்று சொன்னால் சரியல்ல. காவல் நிலையத்தில் பாராவிலிருந்து நிலைய அதிகாரி வரை என்னென்ன வேலைக்கு நியமிக்கப்பட்டுள்ளார்கள் என்பது பற்றி தினந்தோறும் நாட்குறிப்பு எழுதுவது என்னுடைய வேலை என்று சொன்னால் சரிதான். ரோந்து பணிக்கு சென்ற போது நான் ரோந்து பணிக்கு சென்றது பற்றி மேற்படி நாட்குறிப்பில் எழுதிவிட்டு சென்றேனா என்றால் இல்லை. கஞ்சா கருப்பு நிற கவரில் இருந்தது. கத்தி எந்த துணியால் சுற்றப்பட்டிருந்தது என்று ஞாபகம் இல்லை. மகசரை நான் படித்து பார்த்து தான் நான் கையெழுத்து போட்டேன். மகசரில்

கஞ்சா காப்பி நிற கவரில் இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். 1ம் எதிரி முட்புதரில் இருந்ததாகவும் அவர் அந்த வழியே வந்து போகும் நபர்களிடமிருந்து பணம் பறிப்பதற்காக கத்தி வைத்திருந்ததாக எங்களிடம் கூறியதாக முதல் விசாரணையில் கூறினேன். முட்புதர் வழியாக பொது மக்கள் யாரேனும் செல்ல முடியுமா என்றால் முடியும். 2 மணி முதல் 3 மணிவரை 1ம் எதிரியை விசாரணை செய்யும் வரை சம்பயிடத்து அருகே பொது மக்கள் ஒருவர் கூட செல்லவில்லையா என்றால் சென்றார்கள் என்று கூறி விட்டு பிறகு சாட்சி செல்லவில்லை என்று கூறினார். 1ம் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட பொருள் காய்ந்த இலையாக கூட இருக்கலாம் என்று சொன்னால் இல்லை அது கஞ்சா தான். எந்த அடிப்படையில் நான் அது கஞ்சா என்று கூறுகிறேன் என்றால் நான் கஞ்சாவை பலமுறை பார்த்துள்ளேன். சான்றிதழ் ஏதாவது வாங்கினோமா என்றால் இல்லை. முதல் தகவல் அறிக்கையை காவல் நிலையத்தில் தான் பதிவு செய்தோம். ஒப்புதல் வாக்குமூலம் சம்பவயிடத்தில் பதிவு செய்தோம். ஒப்புதல் வாக்குமூலம் சம்பவயிடத்தில் மடிகணினியில் பதிவு செய்யப்பட்டு உதவி ஆய்வாளர் பாலாஜி சென்று பிரிண்ட் அவுட் எடுத்து வந்தார். பாலாஜி இருசக்கர வாகனத்தில் சென்று பிரிண்ட் எடுத்து வந்தார். 1ம் எதிரியை பிடித்தது உதவி ஆய்வாளர் பாலாஜி தான். நாங்கள் நான்கு பேரும் சென்று ஏன் 1ம் எதிரியை மட்டும் பிடித்தோம் என்றால் அவர் ஏற்கனவே எங்களுக்கு தெரியுமா என்றால் தெரியாது. மற்ற 3 எதிரிகளை பிடிக்க முயற்சி செய்யவில்லையா என்றால் முயற்சி செய்தோம். மகசர் சம்பவயிடத்தில் தான் தயார் செய்தோம். உதவி ஆய்வாளருக்கு ரகசிய தகவலை கூறியது யார் என்று எனக்கு தெரியாது. 20ந்தேதி இந்த வழக்கில் 3 எதிரிகளை கைது செய்த விவரம் பற்றி எனக்கு தெரியுமா என்றால் அது குறித்து ஞாபகம் இல்லை. மற்ற 3 எதிரிகளை 18ந்தேதி கைது செய்தார்களா அல்லது 20ந்தேதி கைது செய்தார்களா என்றால் தேதி எனக்கு ஞாபகம் இல்லை. நான் மேற்படி 18 மற்றும் 20ந்தேதி காவல் நிலையத்திற்கு பணிக்கு வந்தேனா என்றால் இல்லை. நான் கூறுவது போல் சம்பவமே நடைபெறவில்லை என்றும் 1ம் எதிரியை காவல் நிலையம் அழைத்து வந்து ஒப்பதல் வாக்குமூலம் மகசர் தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. எதிரி சரித்திர பதிவேடு குற்றவாளி என்பதால் உயர் அதிகாரியின் உத்தரவிற்கு இணங்க கஞ்சா வழக்குடன் ஆம்ஸ் ஆக்ட்டையும் சேர்த்து வழக்கு பதிவு செய்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. அனைத்தையும் காவல் நிலையத்தில் வைத்து பதிவு செய்ததால் தான் மகசரில் குறிப்பிடப்பட்டுள்ள

கவரின் உடைய நிறம் கூட எனக்கு தெரியவில்லை என்றும் வழக்கு சொத்தான கத்தியும் வழக்கிற்காக தயாரிக்கப்பட்டவை என்று சொன்னால் சரியல்ல. மேல் அதிகாரியின உத்தரவால் தான் நிலைய எழுத்தரான என்னை இந்த வழக்கில் சாட்சியாக இணைக்கப்பட்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சம்பவம் உண்மையா இருக்கும் பட்சத்தில் பொது மக்களை தான் சாட்சியாக சேர்த்து இருப்போம் என்றும் இது பொய்யாக புனையப்பட்டதால் தான் எங்களை சாட்சியாக சேர்த்து வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் சம்மந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. அதிகாரி கூறியதால் தான் நான் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**மறு விசாரணை :**</u> இல்லை.

Jayamangalam Sudhakaran

II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2026.06.10 17:36:32 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.